

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை நேரு விளையாட்டரங்கில் காணொலிக் காட்சி வாயிலாக தஞ்சாவூர் அன்னை சத்யா விளையாட்டு அரங்கில் ரூபாய் 7 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள செயற்கை இழை ஓடுதளப் பாதை மற்றும் இயற்கை புல்வெளி கால்பந்து மைதானம் ஆகியவற்றை திறந்து வைத்ததை தொடர்ந்து உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஸ்டார் அகாடமி விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கினார்கள். மாவட்ட ஆட்சித்தலைவர் பிரியங்கா பங்கஜம், தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் .துரை.சந்திரசேகரன், தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், தஞ்சாவூர் மாவட்ட தடகள சங்க தலைவர் டி. கே.வி.கிருஷ்ணசாமி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி ஆகியோர் உடனிருந்தனர்.



தர்மபுரி மேற்கு மாவட்டம் அரூரில் இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.சிவகுரு ஏற்பாட்டில் அரூர் அரசு கலை கல்லூரி அருகில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தினை வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்தார். உடன் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் பி.பழனியப்பன்,தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர்,கிழக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் ஆ. மணி,மாநில இளைஞரணி துணை செயலாளர் பி.எஸ்.சீனிவாசன், நகர செயலாளர் முல்லை.ரவி, ஒன்றிய செயலாளர் வேடம்மாள்,பேரூராட்சி தலைவர் இந்திராணி தனபால், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் தீ.கோடீஸ்வரன், டி.தங்கசெழியன், ஏ.நாசர், பி.என்.சி.மகேஷ்குமார், பி.டி.ஹரிபிரசாத், உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.

# கடலூர் மேற்கு மாவட்டச் செயற்குழு கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் சி.வி.கணேசன் அறிக்கை!



கடலூர், மே 7-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதல்படி, கடலூர் மேற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட கழக அவைத் தலைவர் டாக்டர் கொ. நந்த கோபாலகிருஷ்ணன் தலைமையில் இன்று (07.05.2025 - புதன்கிழமை) மாலை 4.30 மணியளவில் நெய்வேலி, தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெறுகிறது.

அதுசமயம், மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுகுழு, உறுப்பினர்கள், ஒன்றியக் கழக, நகர கழக,பேரூர் கழக செயலாளர்கள், கழக அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், தொ.மு.ச நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. இந்திய ஒன்றியத்திற்கே முன் மாதிரியான முதலவராக திகழும் நமது கழக தலைவருக்கு பாராட்டு தெரிவித்தல்

2. கழக அரசின் நான்காண்டு கால சாதனைகளை மாவட்டம் முழுவதும் மக்கள் முன் எடுத்து செல்ல சாதனை விளக்க கூட்டங்கள் நடத்துவது

3. ஜீன் 1 அன்று மதுரையில் நடைபெற உள்ள கழக பொதுக்குழு கூட்டத்தில் கடலூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பொதுக் குழு உறுப்பினர்கள் கலந்து கொள்ளுவது.

4. கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு மாவட்டக் கழக செயலாளர், அமைச்சர் சி.வி.கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் - 312 மாணவர்களுக்கு

# எம்.ஆர்.எப். தனியார் நிறுவனத்தில் பயிற்சியில் சேர ஆணைகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்! எம் .பிரபாகரன் எம்.எல்.ஏ. வீ.ஜெகதீசன் பங்கேற்பு!

பெரம்பலூர், மே 7-

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கிரேஸ்பச்சாவ் தலைமையில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் முன்னிலையில், பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் 312 மாணவர்களுக்கு பெரம்பலூரில் உள்ள எம்.ஆர்.எஃப் நிறுவனத்தில் ஓராண்டு தொழிற்பழகுநர் பயிற்சி சேர்க்கைக்கான ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் என்ற ஒற்றை இலக்கை நோக்கி மாணவர்கள் முதல் விவசாயிகள், பொதுமக்கள் வரை அனைவருக்குமான அரசு நலத் திட்ட உதவிகள், சீர்மிகு சிறப்புத்திட்டங்கள், பல்வேறு புதுமைத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக மாணவர்கள் நலனை காப்பதில் இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திகழ்கிறார்கள்.

அதற்கு எடுத்துக்காட்டாகத்தான் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் 1,000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம், மாணவர்களுக்கு1,000 வழங்கும் தமிழ்ப்புதல்வன் திட்டம், திறன் பயிற்சிக்கான நான் முதல்வன் திட்டம் என மாணவர்களின் கல்வி நலனை கருத்தில் கொண்டு பல திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவர்களின் நலன் காத்து, தமிழ்நாட்டில் கல்விப் புரட்சியை ஏற்படுத்தி வருகிறார்.

அதனடிப்படையில் தான் இன்றும் கூட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் மாவட்ட திறன் பயிற்சி அலுவலகத்தின் சார்பில் பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் உள்ள 7 அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் 312 மாணவர்களுக்கு இன்று தொழில்பழகுநருக்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. பெரம்பலூர் அரசு தொழிற்பயிற்சி நிறு வனத்தில் 81 மாணவர்களும், ஆலத்தூர் அரசு தொழிற்பயிற்சி நிறுவனத்தில் 36 மாணவர்களும், குன்னம்அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 16 மாணவர்களும், பெரம்பலூர் நேஷனல் தனியார் தொழிற்பயிற்சி நிறுவனத்தில் 20 மாணவர்களும், அரியலூர்அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 77 மாணவர்களும், ஆண்டிமடம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 72 மாணவர்களும், அரியலூர் பி.எஸ். சி.ராமசாமி ராஜா தனியார் தொழிற்பயிற்சி நிலையத்தில் 10 மாணவர்களும் என மொத்தம் 312 மாணவர்களுக்கு தொழிற்பழகுநர் சேர்க்கைக்கானஆணைகள் இன்று வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டில், புதிய தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும் என்பதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பாடுபட்டு வருகிறார்கள் அதன் ஒரு பகுதியாகத்தான் பெரம்பலூர் மாவட்டத்தில் பல்வேறு தரப்புமக்களுக்கு வேலைவாய்ப்பை அளித்திடும் வகையில், எறையூர் கிராமத்தில் கோத்தகிரி நிறுவனத்தின் காலனி பூங்காவிற்கு அடிக்கல் நாட்டி ஒரே ஆண்டில் பணிகளை முடித்து திறந்து வைத்தார். இப்பொழுது அங்கே நம்முடைய பகுதியை சேர்ந்த மாணவர்கள் வேலைக்கு சேர்ந்து பயன்பெற்று வருகின்றனர்.

அதிகம் தொழிற்சாலைகள் இல்லாத நம் பெரம்பலூர் அரியலூர் மாவட்டங்களுக்கு தொழிற்சாலைகளை கொடுக்க வேண்டும் அதன் மூலம் ஏழை எளிய மக்கள் வேலை வாய்ப்பு பெற வேண்டும் என்பதன் அடிப்படையில் தான் நம் முதல்வர் அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். ஏற்கனவே நம்முடைய மாவட்டத்தில் சிறந்த முறையில் செயல்பட்டு வரும் பாரம்பரியமிக்க எம்ஆர்எப் டயர் தொழிற்சாலை நிறுவனம் மாணவர்களாகிய உங்களுக்கு இந்த அரிய வாய்ப்பினை வழங்கி இருக்கின்றார்கள் அதன் மூலம் உங்கள் அறிவையும் திறனையும் வளர்த்துக் கொள்வதற்கானஒரு வாய்ப்பாக இந்த தொழில் பழகுநர் பயிற்சி அமைந்துள்ளது. ஆகவே சிறந்த முறையில் மாணவர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி வேலைவாய்ப்பினை பெற்று பயனடைய வேண்டும்.

மேலும் எம்ஆர்எப் டயர் தொழிற்சாலை நிறுவனத்தில் இன்னும் என்ன புதிதாக கற்றுக் கொள்ள முடியும் என்பதை ஆராய்ந்து பார்த்து கவனித்து தெரிந்து கொள்ள வேண்டும். இன்று உலக அளவில் ஒவ்வொரு தொழில்நுட்பங்களும் அபரிவிதமாக வளர்ந்து வருகின்றது. ஏன்ஆட்களே இல்லாமல் செயற்கை நுண்ணறிவு மூலம் வேலை செய்கின்ற அளவிற்கு தொழில்நுட்பங்கள் வளர்ந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொருவரும் தங்களது தனித்திறமைகளை வளர்த்துக் கொண்டால் தான் மாறிவரும் சூழ்நிலைகளை எதிர்கொள்ள முடியும். எனவே, இந்த தொழில் பழகுநர் சேர்க்கைக்கான அரிய வாய்ப்பினை மாணவர்கள்பயன்படுத்தி தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தெரிவித்தார்.

இதில் மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, மாவட்ட கழக பொறுப்பாளர் திரு.வீ.ஜெகதீசன், மாவட்ட திறன் பயிற்சி அலுவலக உதவி இயக்குநர் மு.செல்வம், எம்.ஆர்.எஃப். நிறுவன பொது மேலாளர் எம். நாதன், சென்னை ஸ்பெக்ட்ரம் டேலண்ட் மேனேஜ்மெண்ட் லிட், வெங்கட் சுப்ரமணியன், லெப்பைகுடிகாடு பேரூராட்சித் தலைவர் அ.ச.ஜாகிர் உசேன் திறன் பயிற்சி அலுவலக பயிற்சி அலுவலர் ம.கண்ணதாசன், அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட மாடல் ஆட்சியின் பொற்கால சாதனைகள்

# திருவாரூர் மாவட்டம் முழுவதும் பொதுக்கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை!



திருவாரூர், மே.07 -

திராவிட நாயகர், கழக தலைவர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியின் பொற்கால சாதனைகளை விளக்கி, தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா மற்றும் தலைமைக் கழக பேச்சாளர்கள் பங்கேற்க, திருவாரூர் மாவட்டம் முழுவதும் நடைபெறவிருக்கும் சாதனை விளக்க பொதுக்கூட்டங்களுக்கு மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது, இந்திய துணைக்கண்டத்திலேயே மக்களுக்கான திட்டங்களை நாள்தோறும் நிறைவேற்றி அதனை உடன் செயல்படுத்துவதோடு, தமிழ் மொழி, தமிழ் இனம் இவற்றிற்கு தீங்கு வரும்போதெல்லாம் அதனை தடுத்து சுய மரியாதையை நிலைநாட்டும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவராக திராவிட மாடல் ஆட்சி நடத்தும் திராவிட நாயகர் தளபதி அவர்கள்தான் “மக்களுக்கான முதல்வர்” என்கிற பெருமையை பெற்றவர் என்பது மட்டுமல்லாமல் , மக்களை சந்தித்து மக்களின் ஆதரவினை கேட்கும் அனைத்து உரிமையையும் பெற்ற பெருமைக்கு உரியவர் என்பதில் மாற்றுக்கருத்துக்கே இடமில்லை.

இந்தியாவிலேயே அனைத்து துறைகளிலும் முன்னேறிய மாவட்டமாக, மக்களுக்கான திட்டங்களை உடனுக்குடன் செயல்படுத்தும் மாநிலமாக, சிறுபான்மை சமூகம் பாதுகாப்பாக வாழுகின்ற மாவட்டமாக விளங்கும் அமைதிப்பூங்கவான தமிழ்நாடு, இதற்கெல்லாம் மகுடம் சூட்டும் வகையில் பொற்கால ஆட்சியின் சாதனை திட்டங்களான, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம், மகளிர்விடியல் பயணத்திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், புதுமை பெண்மை திட்டம், தமிழ்புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், இல்லம்தேடி கல்வி திட்டம், மக்களைத்தேடி மருத்துவம் திட்டம் போன்ற திட்டங்கள் உலக அளவில் சாதனை படைத்து தமிழ்நாட்டின் பெருமையை பறைசாற்றி வருகிறது.

இந்த சாதனைகளை மக்கள் மன்றத்தில் எடுத்துக்கூறும் விதமாக, தலைமைக்கழகத்தின் அறிவிப்பின்படி “நாடு போற்றும் நான்காண்டு , தொடரட்டும் பல்லாண்டு” என்கிற தலைப்பில் கீழ்கண்ட இடங்களில் சாதனை விளக்கப்பொதுக் கூட்டம் தலைமைக்கழக பேச்சாளர்களை கொண்டு நடைபெறவிருக்கிறது.

08.05.25.அன்று திருவாரூர் ஒன்றியத்தில் து.மூர்த்தி அவர்களும், கோட்டூர் வடக்கு ஒன்றியத்தில் ஆரூர் மணிவண்ணன் அவர்களும், கூத்தாநல்லூர் நகரத்தில் நாகை .மு.சாகுல் அமீது அவர்களும், குடவாசல் தெற்கு ஒன்றியத்தில் நாகூர். இ.எம் ஜக்கரியா அவர்களும், நீடாமங்கலம் தெற்கு ஒன்றியத்தில் ஏ.சிவா என்கிற சிவகுமார் அவர்களும் பங்கேற்று உரையாகின்றனர்.

09.05.25.அன்று கோட்டூர் தெற்கு ஒன்றியத்தில் வெ.இராசமாணிக்கம் , ஜெ.விக்னேஸ்வரி ஆகியோர்களும், மன்னார்குடி கிழக்கு ஒன்றியத்தில் து.மூர்த்தி அவர்களும், நன்னிலம் தெற்கு ஒன்றியத்தில் வே.விக்ரமன் அவர்களும் ,மன்னார்குடி நகரத்தில் கவிஞர். வேளாங்கண்ணி பொன்னிவளவன் அவர்களும் , மன்னார்குடி மத்திய ஒன்றியத்தில் வே.விக்ரமன் அவர்களும் பங்கேற்று உரையாகின்றனர்.

10.05.25.அன்று திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் நாகூர்.இ.எம் ஜக்கரியா அவர்களும், கொரடாச்சேரி வடக்கு ஒன்றியத்தில் ஆரூர் மணிவண்ணன் அவர்களும், வலங்கைமான் கிழக்கு ஒன்றியத்தில் நாகை .மு.சாகுல் அமீது அவர்களும்,நன்னிலம் வடக்கு ஒன்றியத்தில் கவிஞர்.வேளாங்கண்ணி பொன்னிவளவன் அவர்களும்,மன்னார்குடி மத்திய ஒன்றியத்தில் வே.விக்ரமன் அவர்களும் பங்கேற்று உரையாற்றுகின்றனர்.

11.05.25.அன்று முத்துப்பேட்டை ஒன்றியத்தில் து.மூர்த்தி , அ.தீன்ஷாநூர் ஆகியோர்களும், கொரடாசேரி தெற்கு ஒன்றியத்தில் கவிஞர்.வேளாங்கண்ணி பொன்னிவளவன் அவர்களும், வலங்கைமான் மேற்கு ஒன்றியத்தில் வே.விக்ரமன், இரா.கனிமொழி ஆகியோர்களும், மன்னார்குடி மேற்கு ஒன்றியத்தில் வெ.இராச மாணிக்கம் அவர்களும் பங்கேற்று உரையாற்றுகின்றனர்.

12.05.25.அன்று திருத்துறைப்பூண்டி நகர கழகத்தில் நாகூர்.இ.எம் ஜக்கரியா அவர்களும், திருவாரூர் நகரத்தில் ஆரூர் மணிவண்ணன் அவர்களும், குடவாசல் வடக்கு ஒன்றியத்தில் நாகை .மு.சாகுல் அமீது அவர்களும்,நீடாமங்கலம் வடக்கு ஒன்றியத்தில் வெ. இராசமாணிக்கம் அவர்களும் பங்கேற்று உரையாற்றுகின்றனர்.

இந்த வரலாற்று சிறப்பு வாய்ந்த கூட்டங்களை, மாவட்ட கழகத்துடன் இணைந்து ஒன்றிய நிர்வாகிகள், அனைத்து சார்பு அணைகளின் நிர்வாகிகள், அனைத்து கழக நிர்வாகிகள் ஒன்றிணைந்து சிறப்பாக நடத்துவதோடு, பொதுமக்களை பெருந்திரளாக பங்கேற்க செய்ய ஆவன செய்து, மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர், திராவிட நாயகர் தளபதி ஆகியோரின் சொந்த மாவட்டமான திருவாரூர் என்று கழகத்தின் கோட்டை என்பதை மீண்டும் நிரூபிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



மே 1 தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கோவை வரதராஜபுரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் சமூக நீதி ஓட்டுநர் மற்றும் துலக்குனர் சங்கம், சமூக நீதி தூய்மைப் பணியாளர்கள் சங்கம், கோவை இ.எஸ்.ஐ. மருத்துவமனை இணைந்து நடத்திய குருதிக் கொடை முகாமை சமூகநீதி அமைப்புசாரா மற்றும் பொதுப் பணியாளர் சங்க தலைவர் வழக்கறிஞர் ந.பன்னீர்செல்வம் தலைமையில், சமூக நீதி ஓட்டுநர் மற்றும் துலக்குனர் சங்கம் எஸ்.பிரபாகரன், அஷ்கர் அலி, பிரதாப், ஆர்.பிரபாகரன் ஆகியோர் முன்னிலையில் மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தொடங்கி வைத்தார். இதில் சிங்காநல்லூர் பகுதி செயலாளர் மு.சிவா உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மத்திய மாவட்டம், பெருந்துறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, பெருந்துறை கிழக்கு ஒன்றிய அதிமுக மகளிர் அணி துணைத் தலைவர் மலர்விழி தலைமையில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் மகளிர் அ.தி.மு.க.விலிருந்து விலகி ஈரோடு மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாச்சலம் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர். நிகழ்வில் பெருந்துறை தெற்கு ஒன்றிய செயலாளர் கே.பி.சாமி, முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஏ.வி.பாலகிருஷ்ணன், அயலக அணி துணை அமைப்பாளர் பள்ளக்காட்டூர் ராஜேஷ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகர தி.மு.க சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு குடந்தை மாநகர பகுதியைச் சேர்ந்த ஏழை, எளியவர்களுக்கு தையல் இயந்திரம், மாவு அரைக்கும் இயந்திரம், சாலையோர வியாபாரிகளுக்கு பெரிய அளவிலான நிழற் குடைகளை மாநகரச் செயலாளரும், துணை மேயருமான சு.ப.தமிழழகன் வழங்கினார். உடன் மாநகரக் கழக நிர்வாகிகள் எஸ்.வாசுதேவன், எஸ்.ரவிச்சந்திரன், சிவானந்தம், விசாலாட்சி, பகுதிச் செயலாளர்கள் கண்ணன், கல்யாணசுந்தரம், செல்வராஜ், கிருஷ்ணமூர்த்தி, மண்டல குழு தலைவர்கள் மனோகரன், பாபு நரசிம்மன், சார்பு அணி மாவட்ட அமைப்பாளர் டி.ஆர்.அனந்தராமன், முருகன், வட்டச் செயலாளர் அ.பாலசுப்ரமணியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்னோடிகள் உள்ளனர்.